திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் குடிநீர்ப் பிரச்னையைப் பற்றி முன்பு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பூஸ்டர் சிஸ்டத்தை அமுல்படுத்தப் போகிறோம். அதனுல் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் என்று பதில் அளித்தார்கள். ஆனுல் விசாரித்த பொழுது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது அமைச்சரவர்கள் அந்தத் திட்டமே இல்லையென்கிறூர்கள். அதை ஏற்படுத்த உத்தேசம் உண்டா? முதலிலே சொன்ன பதிலுக்கு அமைச்சரவர்கள் இப்பொழுது என்ன கூறுகிறூர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி "......குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா" என்பது. நான் இல்லையென்று சொன்னேன். வேறு முறை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. முன்னுல் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உடனடியாக பழைய குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ரூ. 20 இலட்சம் செலவில் நிர்மாணிக்கவும் ரூ. 53,000 ஆண்டு பராமரிப்புக்காகவும் திட்டமிடப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆரணி பேருந்து நிலையம்.

*வினு எண். 211—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) ஆரணி நகரத்தில் உள்ள பஸ் நிலையத்தினை தாலுக்கா அலுவலகத்திற்கு எதிரில் உள்ள திடலுக்கு மாற்றுமாறு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) : கோரிக்கை ஒன்றும் வரவில்லை. வேலூர் மண்டல நகராட்சி ஆய்வாளரின் ஆலோசனையின் பேரில்தான் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற ஆணையர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.